பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

28 08 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உயரும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
2. தமிழகத்திற்கு அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அரசுமுறை பயணமாக நேற்று சென்னையிலிருந்து அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.
3. சமக்ரா ஷிக்சா என்ற ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் தமிகத்திற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையினை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.
4. பொது விநியோகத்தில் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையும் ஒரே நேரத்தில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
5. பாரிஸ் பாராலிம்பிக்ஸ் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

---- இனி விரிவான செய்திகள் ---

**[]<<<>>>[]**

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உயரும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச செலாவணி நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பொருளாதாரத்தில் இந்தியா வேகமாக வளர்ந்து வரும் நாடாக திகழ்வதாக குறிப்பிட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நடப்பு ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ஏழு சதவீதமாக இருக்கும் என்று அது கூறியுள்ளதையும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சீனா-வின் வளர்ச்சி ஐந்து சதவீதமாகவும், பொருளாதாரத்தில் பெரிய நாடாக திகழும் அமெரிக்காவின் வளர்ச்சி என்பது இரண்டு புள்ளி ஆறு சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச செலாவணி நிதியம் கூறியுள்ளதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

மத்திய அரசு கொண்டு வந்துள்ள வக்ஃக் மசோதா மீது பொதுமக்கள், அரசுசாரா நிறுவனங்கள், வல்லுநர்கள், வக்ஃப் வாரிய உறுப்பினர்கள், பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம் என நாடாளுமன்ற கூட்டுக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக மக்களவை அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தபால் மூலமாகவோ, மின் அஞ்சல் மூலமாகவோ தங்கள் கருத்துக்களை 15 நாட்களுக்குள் அனுப்பலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் உள்ளிட்டோர் தெரிவிக்கும் கருத்துக்களை தொகுத்து நாடாளுமன்றத்தின் வரும் குளிர்கால கூட்டத்தொடரின் கடைசி நாளில் இந்த கூட்டுக்குழு அறிக்கை தாக்கல் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அரசுமுறை பயணமாக நேற்று சென்னையிலிருந்து அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழ்நாட்டிற்கு அதிக முதலீடுகளை ஈர்க்கும் விதத்தில் தமது அமெரிக்க பயணம் இருக்கும் என்று தெரிவித்தார்.

ஏற்கனவே ஐக்கிய அரபு அமிரகம், சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு தாம் பயணம் மேற்கொண்டதன் மூலம் தமிழ்நாட்டிற்கு பத்தாயிரத்து 882 கோடி ரூபாய் மதிப்பிலான 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டதாகவும், இதன்மூலம் 18 ஆயிரத்து 521 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்த அமெரிக்க பயணத்தின்போது பிரபல நிறுவனங்களின் தலைவர்கள் தம்மை சந்திக்க இருப்பதாகவும், இதன்மூலம் மேலும் கூடுதல் முதலீடுகள் தமிழகத்திற்கு கிடைக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) -41---- செகண்ட்*

இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் அதிக அளவில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து வருவதாகவும், இதன்மூலம் பொருளாதாரத்தில் தமிழகம் முதலிடத்தை எட்டும் என்றும் அவர் கூறினார்.

இந்த பயணத்தின்போது அமெரிக்க வாழ் தமிழர்களையும் தாம் சந்திக்க இருப்பதாகவும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் மாநில அமைச்சர்கள் மற்றும் திமுக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சியின் மூத்த நிர்வாகிகள் முதலமைச்சரை வழியனுப்பி வைத்தனர்.

[]<<<>>>[]

தமிழகத்தில் பொது விநியோக திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையும் ஒரே நேரத்தில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் நேற்று தமது துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்ட அவர், பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றின் கையிருப்பை உறுதி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு அவர் அறிவுறுத்தினார்.

நடப்பு பருவக்காலத்தில் நெல் கொள்முதலை மேற்கொள்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பாதுகாப்புடன் நெல்லை சேமித்து வைக்கத் தேவையான பாலிதின் தார்பாய்களை இருப்பில் வைக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

மாவட்டந்தோறும் 100 அமுதம் அங்காடிகளை திறந்து குறைவான விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திரு சக்கரபாணி வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

மத்திய அரசின் சமக்ரா ஷிக்சா என்ற ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் தமிகத்திற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையினை மாணவர்கள் நலன் கருதி உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர், பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில், இந்த திட்டத்தின் கீழ் முதல் தவணையாக தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டு 573 கோடி ரூபாய் இதுவரை வழங்கப்படவில்லை என்றும், முந்தைய ஆண்டிற்கான 249 கோடி ரூபாயையும் விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டின் கல்வித்துறையில் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் முதன்மையான திட்டம் இது என்பதால், உரிய நேரத்தில் நிதியை விடுவிப்பது மிகவும் அவசியம் என்று அவர் அதில் தெரிவித்துள்ளார்.

பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வியில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்வதாகவும், கல்வித்துறையில் பல புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல லட்சக்கணக்கான குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதற்கு இந்த தொகையினை உடனடியாக விடுவிக்குமாறு திரு மு க ஸ்டாலின், பிரதமரை கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழ் இணைய கல்விக்கழகம் ஏழு புதிய தமிழ் மென்பொருட்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதனை மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு பழனிவேல் தியாகராஜன் நேற்று சென்னையில் வெளியிட்டார்.

இது தவிர தமிழை பிழையின்றி எழுதுவோம் என்ற புத்தகத்தையும் அவர் வெளியிட்டார்.

அனைத்து தரப்பினரும் மிக எளிதாக பயன்படுத்தும் வகையில் இந்த ஏழு மென் பொருட்களையும் தமிழ் இணைய கல்விக்கழகமாக **www.tamilvu.org** மஎன்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

மத்திய அரசு ஊழியர்களுக்கு புதிய ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின்படி 25 ஆண்டுகள் பணி நிறைவு செய்த ஊழியர்கள் பணி நிறைவுக்கு முந்தைய 12 மாதங்களில் பெற்ற சராசரி அடிப்படை சம்பளத்தில் 50 சதவீதம் ஓய்வூதியம் பெறுவது உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

மத்திய அரசின் ஒருங்கிணைந்த புதிய ஓய்வூதிய திட்டம் தங்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று கள்ளக்குறிச்சி தலைமை அஞ்சலக ஊழியர்கள் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - அஞ்சல் ஊழியர்கள் ) -48---- செகண்ட்*

**[]<<<>>>[]**

நேட்டோ கூட்டமைப்பின் கூட்டம் பெல்ஜியம் தலைநகர் ப்ரசல்ஸில் இன்று தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

81-வது சர்வதேச திரைப்பட விழா இத்தாலியின் வெனிஸ் நகரில் இன்று தொடங்கி அடுத்த மாதம் ஏழாம் தேதி வரை நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

சிலி நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு அல்பர்டோ வான் கிளாவரன் புதுதில்லி வந்துள்ளார்.

**[]<<<>>>[]**

ரயில்வே வாரியத்தின் முதன்மை செயல் அதிகாரியாக திரு சதிஷ்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிடும் 29 வேட்பாளர்கள் கொண்ட மூன்றாவது பட்டியலை அக்கட்சி நேற்று வெளியிட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மதுரையில் பள்ளி மாணவிகளுக்கு அரசின் விலையில்லா மிதி வண்டிகளை வணிகவரித்துறை அமைச்சர் திரு மூர்த்தி நேற்று வழங்கினார்,

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாவட்டம் தேனம்பாக்கத்தில் நெல் கொள்முதல் நிலையத்தை மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் நேற்று தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

பாதுகாப்புப்படை ஓய்வூதியதாரர்களுக்கான குறைதீர்க்கும் முகாம் வரும் 30-ஆம் தேதி நாகர்கோவிலில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோவிலில் கடந்த இரண்டு மாதத்தில் உண்டியல் காணிக்கையாக 20 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் ரொக்கம் மற்றும் தங்கம், வெள்ளி, வெளிநாட்டு நாணயங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

[]<<<>>>[]

நீலகிரி மாவட்டத்தில் கோடைக் காலத்தில் ஏற்படும் வாகன நெரிசலை குறைக்கும் வகையில் மாற்றுப்பாதைக்காக மேற்கொள்ளப்படும் பணிகளை ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு நேற்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

பாரிஸ் பாராலிம்பிக்ஸ் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

அடுத்த மாதம் எட்டாம் தேதி வரை இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

இந்தியாவின் சார்பில் 84 பேர் இப்போட்டிகளில் பங்கேற்கின்றனர்.

இவர்கள் 12 பிரிவுகளில் விளையாட உள்ளனர்.

குறிப்பாக பாரா சைக்கிளிங், பாரா ஜூடோ, பாரா படகுப்போட்டிகளில் முதல் முறையாக இந்திய அணி பங்கேற்கிறது.

[]<<<>>>[]

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தலைவராக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் கௌரவச் செயலாளர் திரு ஜெய்ஷா ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வரும் டிசம்பர் மாதம் ஒன்றாம் தேதி அவர் பதவியேற்றுக் கொள்கிறார்.

35 வயதான திரு ஜெய்ஷா, சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிக்கு மிகக்குறைந்த வயதில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

***End of News***